| Headline | No decision yet on extending electricity rebate to next year, says Takiyuddin | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Malar | | |
| Date | 19 Oct 2021 | Language | Tamil |
| Circulation | 22,000 | Readership | 180,000 |
| Section | NEWS | Page No | 3 |
| ArticleSize | 238 cm² | Journalist | N/A |
| PR Value | RM 3,670 | | |
| | | | |



லங்காவி, அக்.19–

நாட்டின் நிதி நிலையைப் பொறுத்துதான் வரும் டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை டி.என்.பி.யின் 9,44,0000 பயனீட்டாளர்களுக்குக் கட்டணக் கழிவைத் தொடர வேண்டுமா இல்லையா என்பது பற்றி முடிவெடுக்கப்படும் என்று எரிசக்தி மற்றும் இயற்கை வள அமைச்சர், டத்தோஸ்ரீ தக்கியூடின் ஹசான் தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து அமைச்சரவையில் விவாதிக்கப் பட்டு விட்டது. எனினும், முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை.




# நாட்டின் நிதி நிலைமையைப் பொறுத்தே மின் கட்டணக் கழிவு வழங்கப்படும்

கடந்த ஜூலை மாதம் 1ஆம் தேதி தொடங்கி 1 கிலோவாட்டுக்கு வெ.2 வீதம் கழிவு வழங்கப்பட்டு வரும் டிசம்பர் மாதம் 31ஆம் தேதியுடன் முடிவுக்கு வரும்.

இது தொடர்பிலான விவகாரத்தை அரசிடம் நான் முன் வைத்து விட்டேன். எனினும், அரசின் நிதி நிலைமை சிறப்பாக இருந்தால் மட்டுமே கட்டணக் கழிவு தொடர்ந்து வழங்கப்படும்.

இந்நிலையில் 2022ஆம் ஆண்டு வரவுச் செலவுத் திட்டத்திற்கு நாம் காத்திருக்க வேண்டும். இதில் கட்டணக் கழிவுக்கு நிதியமைச்சு அங்கீகரித்தால் கழிவு தொடர்ந்து வழங்கப்படும். அதனால் நல்ல செய்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் செய்தியாளர்களிடம் கோத்தாபாரு நாடாளுமன்ற உறுப்பினருமான தக்கியூடின் ஹசான் குறிப்பிட்டார்.